# மித்ராவயல் கிராமத்தில் முதன்மை சுகாதார மையம் தொடக்கம்




காரைக்குடி அருகே மித்ராவயல் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதன்மை சுகாதார நல மையத் தொடக்கவிழாவில் பேசிய தொழிலதிபர் ஏ.சி. முத்தையா. உடன் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் உள்ளிட்டோர்.

**காரைக்குடி, செப். 4:** காரைக்குடி அருகே மித்ராவயல் கிராமத்தில் ஏ.சி. முத்தையா முதன்மை சுகாதார நல மையம் தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மையத்தை குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் திறந்து வைத்தார். விழாவில் தொழிலதிபர் ஏ.சி. முத்தையா சிறப்புரையாற்றுகையில், சிவகங்கை மாவட்டத்தில் 11-ஆவது முதன்மை சுகாதார நல மையம் மித்ராவயலில் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த மையத்தை மருத்துவமனை என்று கருதாமல் வருமுன் காப்போம் என்ற நோக்கத்தில் நோய்த் தடுப்பு முறைகளை கடைபிடிக்கும் இடமாக பயன்டுத்திக்கொள்ளவேண்டும் என்றார்.

விழாவில் குழந்தைக்கவிஞர் செல்லகணபதி, தேவகி முத்தையா, மித்திராவயல் ஊராட்சித்தலைவர் வெள்ளைச்சாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கிராமப் பிரமுகர்கள், பொது மக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அருண் பொதுநல அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ஏ.ஆர்.ஆர். எம். அருண் வரவேற்றார். அதன் அறங்காவலர் ராஜசேகர் நன்றி கூறினார்.